தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# வனவிலங்கு வாரம் முன்னிட்டு மாணவர்களுக்கு போட்டிகள்

**கோவை, செப். 27–**
ஆன்லைனில் ஓவியம், ஸ்லோகன் போட்டிகளில் பங்கேற்க, கோவை மாவட்ட வனத்துறை அழைப்பு விடுத்துள்ளது.

வனவிலங்குகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும், வனவிலங்கு வாரம் கொண்டாடப்படுகிறது. இந்தாண்டு, வரும் அக்., 2 முதல், 8 ம் தேதி வரை வனவிலங்கு வாரம் கொண்டாடப்பட உள்ளது. இதை முன்னிட்டு, மாவட்ட வனத்துறை சார்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

இதன் ஒரு பகுதியாக பள்ளி மாணவர்களுக்கான ஓவியம், ஸ்லோகன் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஓவியப் போட்டியில் எல்.கே.ஜி., முதல், கல்லூரி மாணவர்கள், வரை பங்கேற்கலாம். ஒருவர் ஒரு ஓவியம் மட்டுமே அனுப்ப வேண்டும். பென்சில், ஸ்கெட்ச், கிரேயான்ஸ், வாட்டர் பெயின்ட் ஆகியவற்றை பயன்படுத்தலாம்.

ஓவியத்துக்கான கேன்வாஸ், எந்த அளவில் வேண்டுமானாலும் இருக்கலாம். ஓவியங்களை புகைப்படம் எடுத்து அனுப்ப வேண்டும்.

ஸ்லோகன் போட்டிகளில், ஒவ்வொருவரும் மூன்று ஸ்லோகன் அனுப்பலாம். நாளை மாலை, 5:00 மணிக்குள் ஓவியங்கள், ஸ்லோகன்களை wilglifeweek.cbe@gmail.com என்ற இ–மெயில் ஐ.டி., க்கு அனுப்ப வேண்டும். விபரங்களுக்கு, 95666 86886, 94889 77753 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.